DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET**

| | | |
|---|---|---|
| Calender | : | CC No. 187/2017 |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | |
| Deposition of Witness for | : | Prosecution P.W.7 |
| | | Defence |

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : முருகையன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : | ஜாதி | : |
| கிராமம் | : | இனம் | : |
| தாலூக்கா | : | வயது | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 19.05.2022.

**முதல் விசாரணை:**

நான் தற்போது ஈரோடு மாவட்டம் சித்தோடு காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிகிறேன். சம்பவ சமயத்தில் உடுமலை காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது உடுமலை காவல் நிலைய குற்ற எண். 656/2012 இதச பிரிவுகள் 468, 471, 420 ன் படியான வழக்கில் சிறப்பு உதவி ஆய்வாளார் சுப்பிரமணியனால் பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை பேரில் மேல் விசாரணைக்காக ஆய்வாளர் கனகராஜ் சாட்சிகளை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பின்னிட்டு தொடர்ச்சியான விசாரணையின் பேரில் வழக்கு கோப்புகளை அவரிடம் இருந்து பெற்று வாதியின் கையொப்பம் தானா என்பதை உறுதி செய்யும் பொருட்டு வாதியிடம் இருந்து நீதிமன்ற அனுமதியின் மூலம் மாதி கையொப்பங்களை பெற்றும் இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட ஆவணங்களில் உள்ள கையெழுத்தும், அ.சா.1 னின் கையெழுத்தும் ஒன்றா என்பதை தெரிந்து கொள்வதற்காக காவல் கருப்புச்சாமி என்பவர் மூலம் 21.11.2013 ம் தேதி நீதிமன்ற கடித எண். 1133 ன் படி கிரைய ஒப்பந்த பத்திரம் ஒன்று, பொது பவர் பத்திரம் ஒன்று, ஒப்பந்த ரத்து பத்திரம் ஒன்று, தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இருந்து பெறப்பட்ட மின் இணைப்பு

பெயர் மாற்ற விண்ணப்ப ஆவணம் போன்றவற்றை சென்னை தடய அறிவியல் துறை ஆவணப்பிரிவிற்கு மாதிரி கையொப்பங்களுடன் கருத்துறு பெறுவதற்காக அனுப்பி வைத்தேன் . பின்பு பணி மாறுதல் ஆகி சென்றுவிட்டேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எதிரி போலியாக தயாரிக்கப்பட்டதாக சொல்லப்படும் எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யப்படவில்லை என்றால் சரியல்ல.